# வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய விசித்திர திட்டம் தீட்டுகிறார்

Phone No 4502 — Regd. No. M. 5458
விலை அரை அணா — இலங்கை 5 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. — MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1] சென்னை (23—3—50) வெளியூர் (24—3—50) [ இதழ் 202

## தொழில்கள் தேசியமயமாவது கூடாதாம்!

—(0)—

## நிர்வாக இயந்திரம் சரியாக இல்லை என கவலை

—(0)—

## இந்திய நிதி அமைச்சரின் முரண்பட்ட கருத்துக்கள்

"நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. கூடியவிரைவில் அதைத் தீர்ப்பதற்கு வழிவகை காணவேண்டும். அப்படிச் செய்யவேண்டுமானால் குடிசைத் தொழிலுக்கும், சிறு கைத்தொழில்களுக்கும் உற்சாகம் அளித்து, பெரிய தொழில்களைப் பிரித்துவிடுவது ஒன்றுதான் வழி என்று எனக்குத் தோன்றுகிறது. குடிசைத் தொழில்களுக்கு மின்சாரத்தை அதிகமாக உபயோகிக்க வசதி செய்ய வேண்டும்."

"தொழில்களைத் தேசிய மயமாக்க வேண்டுமென்று நான்கூட சில நாட்களுக்கு முன்பு வரையில் ஓயாமல் சொல்லி வந்தேன். ஆனால் இப்போது நான் அப்படிச் சொல்லவில்லை அதற்குக் காரணம் என்னவென்றால், தொழில்களைத் தேசிய மயமாக்கினால், அவற்றை நிர்வகிக்கும் இயந்திரம் நன்றாக வேலை செய்ய வேண்டும். அது அப்படி வேலைசெய்யவில்லை',

வெளிநாட்டு மூலதனம் பற்றி அண்மையில் இந்திய நிதி அமைச்சர் ஜான்மத்தாய், பாராளும் மன்றத்தில் பேசிய போது வெளியிட்ட கருத்துகள் தாம் மேலே தரப்பட்டுள்ளவை.

"நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது."

"தொழில்கள் தேசிய மயமாக்கப்பட வேண்டும் என்று நான்கூட இதற்கு முன்பு சொல்லிக்கொண்டுதானிருந்தேன்."

இவை அமைச்சரின் வாக்குமூலங்கள்! வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும்; தொழில்கள் தேசிய மயமாக்கப்பட வேண்டும் என்பது அமைச்சரின் உள்ளத்தில் பதிந்து கிடக்கும் எண்ணங்கள். ஆனால், தான் கொண்ட இந்த எண்ணங்களைத் திட்டங்களாகத் தீட்டி, நாட்டுக்குத்தரும் நல்வாய்ப்பு அவருக்குக் கிட்டவில்லை. கிட்டவில்லை என்று சொல்லுவதைவிட — முடியவில்லை என்று சொல்லுவதே சாலப் பொருத்த முடியதாகும்.

முக்கியமாகத் தோழர் மத்தாய் கொண்ட இரண்டு எண்ணங்களில் ஒன்று உருக்குலைந்துபோயிற்று என்பது, அவரது பேச்சிலிருந்து தெரிய வருகிறது. அதாவது தொழில்கள் தேசிய மயமாக்கப்படல் வேண்டும் என்ற எண்ணம் பறந்துவிட்டது— இல்லை— பறக்கோடச் செய்யப்பட்டது!

ஜான் மத்தாய் ஒரு நல்ல பொருளாதார நிபுணர். அப்படிப்பட்டவரின் கருத்திலே தொழில்கள் தேசியமயமாவதன் அவசியம் தென்பட்டு, பின்னர் மறைந்துவிட்டதென்றால், இடையிலே ஏற்பட்ட இந்தமாறுதலை நாம் அலட்சியமாகக் கருதிவிடமுடியாது. இதனைக் கருத்து மாற்றம் என்று சொல்லுவதைவிட, மனமாற்றம் என்று சொல்லுவதே பொருத்தமுடையதாகும்.

இந்திய ஆட்சியாளரின் போக்கு முதலாளித்துவ போக்கு. இத்தகையப் போக்குடைய ஆட்சியின் கீழ் பணியாற்றும் அமைச்சர் ஒருவர் எவ்வளவுதான் நுண் அறிவுடையோராயினும் சரி, நாட்டு நிலை, மக்கள் நிலை,

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

# மாலடோவ் ஸ்டாலினுக்கு 'வாரீசு' ஆவார்?

## ஸ்டாலினுக்கு ஓய்வு பெற உத்தேசமாம்

பெர்லின், மார்ச் 22—

மார்ஷல் ஸ்டாலினுக்கு அடுத்த வாரிசு என்று கருதப்பட்டவரும், ரஷியாவின் முன்னாள் அயல்நாட்டு மந்திரியுமாகிய தோழர் மாலடோவ் சோவியத் ரஷியாவின் எல்லா விதமான நிர்வாகப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டாரென்று மேற்கு ஜெர்மனி செய்தி ஸ்தாபனமொன்று அறிவிக்கிறது. தோழர் ஸ்டாலினுக்கு வயது அதிகம் ஆகி விட்டதால், அவருக்கு நிர்வாகப் பொறுப்புகளைக்கொடுத்து தொல்லை தரக்கூடாதென்ற நோக்கத்தோடே இவ்வாறு செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

நாஜி வாஸ்ட் என்னும் ராணுவ அதிகாரி கிழக்கு பெர்லின் கம்யூனிஸ்ட் கூட்டமொன்றில் பேசுகையில், இவ்வாறு வெளியிட்டதாகச் செய்தி அறிக்கை கூறுகிறது மார்ஷல் ஸ்டாலினின் வயது 70 ஆகும்.

ஒருவருடத்துக்கு முன்னால் அயல்நாட்டுப் பதவிவகித்து வந்த தோழர் மாலடோ வேறு காரியங்களுக்காக அயல்நாட்டு மந்திரி பதவியிலிருந்து விலகிக்கொள்வதாக, மாஸ்கோ ரேடியோ அறிவித்தது. தோழர் விஷன்ஸ்கி அயல்நாட்டு மந்திரியாக இருந்து வருகிறார்.

ஆனால் மாலட்டோ உதவி பிரதமர்களில் ஒருவராக மட்டும் இருந்துவந்தார்.

மாலடோ அயல்நாட்டு மந்திரி பதவியிலிருந்து விலகியதை யொட்டிப் பலவிதமான வதந்திகள் உலவிவந்தன.

"மாலட்டோ ஸ்டாலினை மீறிப் பேசி இருப்பார், ஆகையால் அவரை ஒழித்துக்கட்டிவிட்டார்கள். மாலடோவ் போன இடம் தெரியவில்லை ஸ்டாலின் சர்வாதிகார தலைவிரித்தாடுகிறது என்றெல்லாம் அமெரிக்கப் பத்திரிகைகள் ஓயாமல் எழுதிக்கொண்டிருந்தன.

வேறு சில பத்திரிகைகள், சீனாவில் கம்யூனிஸ்டுகள் வெற்றிகரமாகப் போரிட மாலடோ வழிவகுக்கச் சென்றிருக்கிறாரென்றும், கிழக்கு ஐரோப்பாவில் ரஷிய மீது வெறுப்பு அதிகமேற்பட்டிருப்பதால், தகுந்த வழி வகுக்க மாலட்டோ வேலை செய்கிறாரென்றும் எழுதி வந்தன.

'மாலட்டோவைப் பற்றி இனி ஒன்றும் கேள்விப்படவே முடியாது' என்று கூடச் சில செய்தித்தாள்கள் குறிப்பிட்டன.

## செஞ்சீனாவுக்கு பிரிட்டிஷ் ஸ்தானிகர்

லண்டன், மார்ச். 22—

செஞ்சீனா—பிரிட்டன் இவைகளுக்கிடையே ஸ்தானிகர்களை நியமித்துக்கொள்ளும் விஷயமாக நடைபெறும் பேச்சுவார்த்தைகள் நீடிப்பதால் ஏதாவது தகராறு ஏற்பட்டிருக்கலாமோ என்று ஹேஷ்யங்கள் கூறப்படுகிறது.

இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இந்தப்பேச்சுவார்த்தைகள் துரிதமாக நடந்ததைச் சில விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

## பத்து ஆண்டுகளில் தங்கஉற்பத்தி குறைவு

லண்டன், மார்ச். 22—

சென்ற 10 ஆண்டுகளில் உலக தங்க உற்பத்தி 140 லட்சம்அவுன்ஸ் குறைந்திருக்கிறதென்றும், ஆனால் காமன்வெல்த் தங்க உற்பத்தி அதிகரித்திருக்கிறதென்றும், உலக தங்கத்தில் முக்கால்பங்கு காமன்வெல்த் நாடுகள் உற்பத்தி செய்ததுதான் என்றும் லண்டன் தங்க மார்க்கெட் வியாபாரிகள் அறிக்கையொன்று கூறுகிறது.

# அமெரிக்கத் தூதுவர்களின் அந்தரங்க மாநாடு

—(0)—

## கருத்தை வெளியிட மாட்டார்களாம்!

ரோம், மார்ச். 22—

ரோமிலுள்ள யுனைடெட் ஸ்டேட்ஸ் ஸ்தானிகாலயத்தில் மிக முக்யமான ரகசிய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மாஸ்கோ, பாரிஸ், லண்டன் இவைகளிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர்களும், பெர்லினிலுள்ள அமெரிக்க ஹைகமிஷனரும், மார்ஷல் திட்ட நிர்வாகி அவ்ரில் ஹாரிமானும் இங்கு வந்து சேர்ந்திருக்கின்றனர்.

இவர்களைத் தவிர சிலமுக்ய அமெரிக்க அதிகாரிகளும் இங்கு வந்திருப்பதாக கூறப்படுகிறது. பல முனைகளில் கம்யூனிஸ்டுகள் இன்னும் சில தினங்களில் அமெரிக்க ராணுவ சப்ளை உதவியைத் தடுப்பதற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கை விஷயமாக ஆலோசிக்கவே இம்மாநாடு நடைபெறுவதாக கூறப்படுகிறது.

இது விஷயமாக அவ்ரில் ஹாரிமான் எதையும்வெளியிட மறுத்து விட்டார். மேற்கு ஐரோப்பாவில் கம்யூனிஸம் தலைதூக்கவில்லை என்றும். ஜூலை 1952 க்குள் ஐரோப்பாவின் டாலர் நெருக்கடி தீர்க்கப்பட்டுவிடும் என்றும் அவர்கூறினார்.

## பதவி ஏற்பு வைபவம்

லண்டன், மார்ச். 22—

லண்டனில் இந்தோனேஷ்ய ஸ்தானிகராக நியமிக்கப்பட்டிருக்கும் டாக்டர் ஸுபாண்ட்ரியோ விஜாஜனன்ந (காலே) பிரிட்டிஷ் மன்னரிடம் தன் அத்தாட்சிப் பத்திரங்களைச் சமர்ப்பிப்பார்.

இவர் பிரிட்டிஷ் சர்க்காரின் 'ஸ்டேட்கோச்'சில் பவனியாக அழைத்துச் செல்லப்படுவார்.

இரா நாட்டு ஸ்தானிகர்கள் பதவி ஏற்கு முன் 'ஸ்டேட்கோச்'சில் அழைத்து வருவது யுத்தத்திற்கு முன்பு இருந்த வந்த வழக்கமாகும். அவ்வழக்கம் மன்னர் உத்தரவின்பேரில் மீண்டும் இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

## பிரிட்டிஷ் கப்பலை சியாங் விமானங்கள் தேடுகின்றன

ஹாங்காங், மார்ச் 22—

கம்யூனிஸ்ட் சீனாவுக்கு 100,000 டாலர் மதிப்புள்ள ஆயுதங்கள் 'ஸ்மோர்ப்ட்'கள் கொண்ட பிரிட்டிஷ் கப்பல் இங்கிருந்து புறப்பட்டிருக்கிறது. இதற்குமுன் இதே மாதில் ஒரு கப்பல் மார்ச் 15-ந்தேதி புறப்பட்டிருக்கிறது. இவைகளை சியாங் விமானங்கள் தேடிவருகின்றன.

# செஞ்சீனாவை சேர்த்துக்கொள்வதா, கூடாதா?

## ஐ. நா. சபையில் கவலை

லண்டன், மார்ச். 22—

செஞ்சீனாவை ஐ நா.வில் சேர்க்கும் விஷயம் இன்னும் பாதுகாப்பு கௌன்ஸிலில் தீர்க்கப்படாமலிருக்கிறது பாதுகாப்பு சபையிலுள்ள 5 மெம்பர் நாடுகள் இதுவரைக் கம்யூனிஸ்ட் சீனாவை அங்கீகரித்திருக்கின்றன. கம்யூனிஸ்டு சீனாவை ஐ. நா.வில் அனுமதிப்பதை ஆதரிகக மெஜாரிட்டி ஏற்பட இன்னும் இரு பாதுகாப்பு மெம்பர் நாடுகள் செஞ்சீனாவை அங்கீகரித்தாகவேண்டும்.

கம்யூனிஸ்டு சீனாவை ஐ. நா.வில் அனுமதிக்கவேண்டும் என்பதை யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆதரிக்காது என்றும், ஆனால் மெஜாரிட்டி தீர்ப்புக்கு கட்டுப்பட்டு நடக்கும்என்றும் யு. எஸ். ராஜாங்க மந்திரி தோழர் அகீஸன் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

இவ்விஷயமாக நெருக்கடி நீடிப்பது ஐ நா.வின்நலனுக்குக் கெடுதல் என்று, பிரிட்டன் அபிப்பிராயப்படுகிறது. —குளோப்

மாலை மணி

சென்னை 23-3-50 வியாழக்கிழமை

# இலவு காத்தக் கிளி!

இந்தியாவில் பொருள் உற்பத்தி வளத்தைப்பெருக்க வேண்டி, அமெரிக்க வல்லூறுகளுக்கு விடுத்த அன்பழைப்புகள் ஏராளம்—என்றாலும், அவைகளை ஏற்றுக்கொள்ள எந்த வல்லூறும் இன்னமும் முன் வரவில்லை!

பொதுவாக அயல்நாட்டு வல்லூறுகளுக்கும், குறிப்பாக அமெரிக்க வல்லூறுகளுக்கும் அன்பழைப்பு நயவஞ்சகர்களாலல்ல—நாட்டின் தலைவர்களாலேயே விடப்பட்டது எனினும், அவைகள் இந்தியப் பொருளாதாரக் காட்டில் வேட்டையாட வர மறுக்கின்றன. தாம் வஞ்சிக்கப்பட்டு விடுவோமோ என்ற அச்சம், அவற்றிடம் குடிபுகுந்து விட்டதாகவே காணப்படுகிறது.

இந்தியாவில் பெரும் மூலதனத்தைப் போட்டுத்தொழில் வளர்ச்சியடையச் செய்யுமாறு, அமெரிக்க முதலாளிகளிடம் இந்தியாவின் பிரதமமந்திரியும் அயல்நாட்டு மந்திரியுமான பண்டித நேரு, பலதடவைகள் ஆசைமொழி பகர்ந்தார்—எல்லா வசதிகளும் செய்து தருவதாக வாக்களித்தார்—லாபத்தைத் தங்கள் சொந்த நாட்டிற்குக் கொண்டு செல்லலாம் என்று நல்லுறுதிகொடுத்தார்—அவர்கள் போடும் மூலதனத்திற்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாது என்று உறுதிமொழி கூறினர். இவ்வளவு செய்தும் அவர்கள் மனம் இரங்கவில்லை அயல்நாட்டில் தொழில் நடத்தி, அந்நாட்டுப் பொருளைச் சுரண்டக்கூடாது, என்ற நல்ல எண்ணம் அல்ல, அமெரிக்க முதலாளிகளைத் தடுப்பது; தாம் சுரண்டுவதற்குப் போதுமான வசதிகளும், போடும் மூலதனத்திற்குப் போதுமான பாதுகாப்பும் கிடைக்குமா என்ற ஐயமும், அந்த ஐயத்தின் அடிப்படையாகப் பிறந்த அச்சமும்தாம் அவர்களைத் தடுத்து நிறுத்துகின்றன என்று அறியப்படுகிறது.

யாருக்கும் கொடுக்காத அளவு வரவேற்பை, பண்டித நேருவுக்குத்தான் அமெரிக்கா கொடுத்தது என்றும், அமெரிக்கா இந்தியாவின் மீதுகொண்டிருக்கும் அன்பிற்கு வேறு எடுத்துக்காட்டு எதுவும்இருக்க முடியாது என்றும்,அமெரிக்காவின் பரந்த நோக்கத்திற்கும், அது இந்தியாவிற்கு உதவி செய்யவேண்டுமென்பதிலே கொண்டிருக்கும் ஆர்வத்திற்கும் ஈடு இந்த உலகத்தில் எங்஑னும் இருக்கமுடியாது என்றும் பலப்படப் புகழ்ந்து பேசி, அமெரிக்கா—இந்தியா தொடர்பின் தன்மைக்கு அண்மையில் விளக்கங் கொடுத்துக்கொண்டிருந்தனர் காங்கிரஸ் தலைவர்களும், அவர்களைச் சார்ந்துநிற்கும் ஏடுகளும் அந்த அமெரிக்கா தான் இந்தியாவில் மூலதனம் போட அஞ்சுகிறது—இந்தியாவிடம் நம்பிக்கைகொள்ள மறுக்கிறது

அமெரிக்காவின் மூலதனத்தை எதிர்பார்ப்பதுதவறு—தீங்கிழைப்பதாகும் என்று பலரும்கூறிவந்தபோது, அவர்களை யெல்லாம் ஏசினர்—அமெரிக்காவின் நட்புரிமையை பற்றிப் புகழ்ந்தனர், காங்கிரஸ் ஆட்சிப்பீடத்தவர் அமெரிக்காவின் மூலதனத்தை எதிர்பார்த்து, ஏமாற்றம் அடையும் கட்டத்தை, இப்பொழுதுதான் உணர்ந்துள்ளனர் ஆளவந்தார்கள்.

அமெரிக்கா, முழுப்பங்கையும்கூட தானே போடாமல், பாதிப் பங்கு இந்தியாவோடு கூட்டு வைத்துக்கொள்ளும் வகையிலாவது மூலதனம் போட முனைகிறதா என்றால், அப்படியும் எதிர்பார்ப்பதற்கில்லை என்ற கருத்தைத், தோழர் ஜான்மத்தாய் இந்திய பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். அமெரிக்காவிலுள்ள உலகபாங்கி, அதிக வட்டிக்கு இந்தியாவுக்குக் கடனுக்கொடுக்கத்தான்இதுவரையில்சம்மதித்துள்ளதே தவிர, மூலதனத்தைக்கொட்டி இந்தியாவின் பொருள் உற்பத்தி வளத்தைப் பெருக்க, அமெரிக்காவுக்கு அக்கரை ஏற்படவில்லை! எப்படி ஏற்படும்!

அமெரிக்காவின் மூலதனம் இந்தியாவிற்கு வரும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை, என்று தோழர்ஜான்மத்தாய் இந்தியப் பாராளுமன்றத்தில் கூறிவிட்டார். இந்தியாவின் பொருளாதார நிலையும் அயல்நாட்டு மூலதன வருகையும் எப்படி இருக்குமென்பதைத் தோழர் மத்தாய் விளக்கிக்காட்டுகிறார்- அமெரிக்காவின் மீது வைத்திருந்த நம்பிக்கையை ஆங்கிலேயரிடம் திருப்புகிறார்.

"அமெரிக்காவின்மூலதனத்தைமிகக்குறைவாகவரையறுக்கப்பட்டதாகத்தான் எதிர்பார்க்க முடியும். நம்முடைய நாட்டு மூலதனம் அப்படியே ஸ்தம்பித்து இருக்கிறது எங்கிருந்து மூலதனத்தைப் பெறுவது என்பதுதான். பிரிட்டனே மிகக் கஷ்டமான நிலைமையிலிருக்கிறது. அமெரிக்காவின் தனிப்பட்டோரின் மூலதனத்தைவிட பிரிட்டனின் பங்கு இந்நாட்டிற்குக் கிடைக்கக் கூடிய மாதிரியில் பிரிட்டனின் நிலையிருப்பதாகவே எனக்குப் படுகிறது...அவர்கள் நாம் விரும்பும் அளவுக்குமிகுதியாக மூலதனம் போடுவார்களா, மாட்டார்களா என்பதை நான் உறுதியாக அறிந்து கொள்ள முடியாதவனாக இருக்கிறேன். எல்லாவற்றையும் பார்க்கும் போது அமெரிக்காவைவிட பிரிட்டனிலிருந்தே நமக்குப் பொருளாதார உதவிகிடைக்கக் கூடும் என்று நான் நம்புகிறேன்."

அமெரிக்காவைவிட்டுவிட்டு, இப்பொழுது பிரிட்டனிடம் மோப்பம்கொள்ள ஆரம்பித்திருக்கிறார், இந்தியாவின் நிதி மந்திரி. பொருளாதார வளம் பொருந்திய டாலர்கொழிக்கும் அமெரிக்காவே இந்தியாவில் மூலதனம்போட அஞ்சுகிறது என்றால், போரினால் பாதிக்கப்பட்ட பொருளாதார நெருக்கடியில் சிக்கிச் சீரழிந்துகிடக்கும் பிரிட்டன், எவ்வாறு மூலதனத்தைச் சமபங்குவீதத்தில் போடத்துணியும் என்று தெரியவில்லை.அமெரிக்கா பிரிட்டன் போன்ற அயல்நாடுகள், தங்கள் மூலதனத்திற்கு, இந்தியாவில் நாளடைவில் பாதுகாப்பு இல்லாமல் போய்விடும் என்றஅச்சத்தால்இந்தியாவின் கோரிக்கைக்கு இணங்க முன்வரவில்லை. இந்தியா, தான் அமெரிக்கா— பிரிட்டனுக்கு நல்லபிள்ளையாக நடந்துகாட்ட, எவ்வளவோ கம்யூனிஸ்டு எதிர்ப்பு நடவடிக்கைகளெல்லாம் எடுத்துக்கம்யூனிஸ விரோதியாகவும், அமெரிக்காவின் விசுவாசியாகவும் தன்னை விளம்பரப்படுத்தி வருகிறது

**இந்தியாவின் மூலதனம் முடக்கப்பட்டுக்கிடக்கிறது.**

**அமெரிக்காவின் மூலதனம் எதிர்பார்ப்பதற்கில்லை.**

**பிரிட்டனின் மூலதனம் வருமா என்பது சந்தேகத்திற்கிடமாக இருக்கிறது.**

என்று கூறி, எந்தமூலதனத்தையும் பெறுவதற்கு வழி கிடைக்காமல் திகைக்கிறார் நிதி மந்திரியார்.

இந்தியாவில் ஸ்தம்பித்துக் கிடக்கும் மூலதனத்தை நடமாட்டமுள்ளதாக ஆக்கி, நாட்டில் நல்ல தொழிலபிவிருத்தி செய்ய முடியாதபடி ஆற்றலற்றவர்களாக ஆகியிருக்கிறார்கள் — ஆக்கப்பட்டிருக்கிறார்கள் ஆளவந்தார்கள்.

அமெரிக்காவிடம் இருந்து கிடைக்கும் என்று எதிர்பார்த்து; ஏதும் கிடைக்கப் பெறாமல் ஏமாந்து, இப்பொழுது பிரிட்டனிடமிருந்து ஏதாவது கிடைக்குமா என்று எதிர்பார்க்கிறார் இந்தியாவின் நிதிமந்திரி.முடிவுஇலவுகாத்தக் கிளி போல்தான் ஆகும் என்பது தெளிவாகத் தெரியக் கிடக்கிறது! இந்தியாவின் முடக்கப்பட்டிருக்கும் மூலதனத்தையும், முதலாளிகளின் கையில் சதிராடும் மூலதனத்தையும் இந்திய அரசாங்கம் தன்னுடையதாக ஆக்கிக் கொள்ள முயலாத வரையில், இந்தியா, இலவு காத்தக்கிளி போல், அமெரிக்காவையும், பிரிட்டனையும் எதிர்பார்த்துக் கொண்டுதான் இருக்கவேண்டும்! முடிவு 'பயனில்லை'என்று தான் இருக்கும்!

## ஆப்கானிஸ்தான் அயல்நாட்டுக் கொள்கை

*கெய்ரோ, மார்ச் 21—*

இதர இஸ்லாமிய நாடுகளுடன் நெருங்கிய உறவைக்கொண்டிருப்பதே ஆப்கானிய கொள்கை என்று ஆப்கன் அயல்நாட்டு மந்திரி எல்-சயத்முகம்மதுகான் நிருபர்களிடம் கூறினர். அமைதியையே விரும்புவதுடன் ஐ.நா.வின் கொள்கையை ஆப்கானிஸ்தான் ஆதரிக்கிறது என்றும், அரபு நாடுகளுடன் பொருளாதார விவசாய வியாபாரத் துறைகளில் ஆப்கானிஸ்தான் ஒத்துழைக்கும் என்றும் கூறினர்.

## தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

**24-3-50**

மேட்டுப்பாளையம்:— சி. பி. சிற்றரசு

**25-3-50**

சலக்கண்டபுரம்:—என். வி. நடராசன், ப. கண்ணன்.

தாதையங்கார்பேட்டை:—சி. பி. சிற்றரசு

**26-3-50**

துறையூர்:— சி. பி. சிற்றரசு.

## வேலையில்லாத்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பொருளாதார நிலை முதலியன அறிந்தவராயினும் சரி, அவர்களுடைய அறிவும் ஆற்றலும் தலைமைப்பீடத்தின் போக்கினை ஒட்டியே இயங்க முடியுமேயன்றி, சுதந்தரமாக இயங்கவோ, பணியாற்றவோ இயலாது. எனவேதான், தொழில்கள் தேசியமயமாக வேண்டும் என்று தோன்றிய பரந்தபனப்பான்மை பின்னர் முதலாளித்துவத்துக்குத் துதிபாடும் அளவுக்குக் குறுகி விட்டது!

இங்ஙனம், தன்னுடைய அடிப்படை எண்ணமே மாறக்கூடிய நிலைமையில் இருக்கும்போதுதான் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும் என்று விரும்புகிறார் தோழர் மத்தாய்!

தொழில்கள் தேசியமயமாவது கூடாது என்ற பேச்சு ஒரு புறம்! வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும் என்ற முழக்கம் மற்றோர்புறம்! எவ்வளவு முரண்பட்ட கருத்துக்கள்!

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க ஏதேனும் ஒரு வழி உண்டென்றால், அது, அரசியலார் தொழில்களை தேசியமயமாக்குவதினாலேயே ஆகக் கூடிய காரியமாகும்.எவ்வளவுக் கெவ்வளவு அரசாங்கம் பொதுப் பணிகளை மேற்கொள்ளுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு பொது மக்கள் வாழ்விலே மறு மலர்ச்சி காண முடியும். அதுதான் சம தர்ம ஆட்சி முறைக்கு வழி கோலுவதாகும்.

இப்படிப்பட்ட சமதர்மப் பாதையை விட்டு விலகிச் சென்றுவிட்டார் நிதி மந்திரி இங்ஙனம் பாதை தவறிய காரணத்தால்தான் பொருத்தமற்ற கருத்துக்களை வெளியிட வேண்டிய குழப்பமான நிலைமையிலிருக்கிறார் அவர்.

அவரது கருத்து குழம்பிய கருத்து என்பதற்கு அவரது பேச்சுகளே சான்று பகர்கின்றன, அவர் மேலும் பேசியபோது ஓரிடத்தில் குடிசைத் தொழில்களை ஆதரிக்க வேண்டும் என்கிறார். அதே நேரத்தில் மின்சாரசக்தியைப்பயன்படுத்த வேண்டும் என்கிறார். மின்சார சக்தியைப் பயன்படுத்துவது நவீன இயந்திர சாதனங்களை ஆதரிப்பதாகும். இங்ஙனம் ஒரு புறம் முற்போக்கு நவீன சாதனங்களுக்கு ஆக்கமும், மற்றோர்புறம் பழைமைக்கு ஆதரவும் காட்டுவது விந்தையாகவே உள்ளது.

## பொதுச் செயலாளருக்கு தையற் தொழிலாளர் சங்க வரவேற்பு

*குறிஞ்சிப்பாடி, மார்ச். 1*

குறிஞ்சிப்பாடியில் நடைபெற்ற தி. மு. கழக மாநாட்டிற்கு வருகை தந்திருந்த கழகப் பொதுச்செயலாளர் தோழர் அண்ணாதுரைஅவர்களுக்குக் குறிஞ்சிப்பாடி தையற்தொழிலாளர் சங்கத்தின் சார்பாக வரவேற்பு இதழ் ஒன்று மாநாட்டுப்பந்தலில் வாசித்தளிக்கப்பட்டது. சங்கத்தின் சார்பாகப்பொதுச் செயலாளருக்கு மலர்மாலையும் அணிவிக்கப்பட்டது.

மாநாட்டுச் செயலாளராகப் பணியாற்றிய தோழர் கு. த. வெ. பழனியப்பன்அவர்களது அரிய தொண்டினைப்பாராட்டி கழகத் தோழர்களால் வாழ்த்து இதழ் ஒன்றும் அவருக்கு வாசித்தளிக்கப்பட்டது. (ந-நி)

## மீண்டும் சர்க்கரை விநியோகம்

*மதுரை, மார்ச். 19—*

இன்று முதல் நகரிலுள்ள பொது மக்களுக்கு மீண்டும் சீனி வினியோகம் செய்யப்படும்.

7 யூனிட்களும், அதற்கு மேலும் உள்ள கார்டுகளுக்கு அரை வீசை சர்க்கரையும், 6 யூனிட்களும் அதற்குக் கீழுள்ள கார்டுகளுக்கு கால் வீசையும் சர்க்கரை செய்யப்படுமென்று மத்திய உணவுப் மந்திரி அதிகாரி நா. லட்சுமணப்பெருமாள் நாயுடு அறிவிக்கிறார். (ந—நி)

## தி. மு. கழக மத்திய செயற்குழுக்கூட்டம்

*சென்னை, மார்ச். 21—*

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மத்திய செயற்குழுவின் கூட்டம், 24-3-50 வெள்ளிக்கிழமையன்று பிற்பகல் 3-மணிக்கு சென்னை "மாலைமணி" அலுவலகத்தில் நடைபெற இருக்கிறது என்று பொதுச்செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களால் அறிவிக்கப்படுகிறது. திருச்சியில் நடைபெற்றப் பொதுக் குழுக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மத்திய செயற்குழு (Working Committee) இப்பொழுதுதான் முதன் முதலாகக் கூடுகிறது. மத்திய செயற்குழு உறுப்பினர்களுக்கு மட்டும் அழைப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

(1) கழகத்திற்குச் சென்னையில் தனிக் கட்டிடம் அமைப்பது.

(2) கழகத் தோழர்கள்மீது தொடரப்பட்டுள்ள வழக்குகள் பற்றி ஆய்வது.

(3) கழக சட்டதிட்ட நகல் பற்றி ஆய்வது ஆகிய பொருள்கள் பற்றி, செயற்குழுவினர் ஆராய்ந்து முடிவு காண்பர் என்று தெரியவருகிறது. (ந நி)

# அறிவுப்பணிக்குத் தடைவிதிக்கும் ஆட்சி நாகரிக ஆட்சியாகாது

## வெள்ளையர் ஆட்சியே மேல் எனத் தோன்றுகிறது

### மணப்பாறையில் தோழர் என். வி. நடராசன் சொற்பொழிவு

[14—8—50 ல் மணப்பாறையில் கடைத்தெரு திடலில் திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர் என். வி. நடராசன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் கீழே தரப்படுகிறது.]

பேரன்புமிக்க தலைவர் அவர்களே! தோழர்களே! நான் மூன்று ஆண்டுகளுக்கு முன் இவ்வூருக்கு வந்துள்ளேன். அன்று எந்தக் கொள்கையை இங்கு எடுத்துரைத்தேனோ அதையே இன்றும் வலியுறுத்திக் கூறவே இன்று வந்துள்ளேன்.

சுயராஜ்யம் கிடைத்தது, அதைவிட உயர்ந்த அந்தஸ்தான 'குடியரசு' ஆட்சியும் நம் நாட்டிலே தோன்றிவிட்டது. கொடியுயர்த்தி கொண்டாட்டமும் நடத்தியாகிவிட்டது.

**சர்க்கார் விரோதிகள்!**

ஆனால் மக்களின் வாழ்க்கை நிலை, குறிப்பாக பாட்டாளிகளின் அன்றாட வாழ்க்கை வசதி பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்ததைவிடவோ அல்லது, நீதிக்கட்சி ஆட்சியின்போது இருந்த நிலையைவிட ஒரு சிறிதாவது உயர்ந்ததாகக் கூற முடியாது. இன்னும் கூற வேண்டுமானால், ஏழை-நடுத்தர மக்களின் தற்கால நிலை இதுவரை எந்த ஆட்சியிலுமில்லாத அளவு மோசமாகி வருகிறது. என்பதை, காங்கிரசாரிலேயே சிலர் ஒப்புக்கொள்ளும் உண்மையாகும். நடுத்தர மக்கள் விலைவாசிகளின் ஏற்றத்தால் தொல்லை சகிக்க முடியாது சர்க்காரை எதிர்த்துக் கேட்டால் 'சர்க்காரைக் கவிழ்க்கும் சதிச் செயல்'' என்று சதி அடக்கு முறையைப் பிரயோகிக்கின்றது, இந்தக் காங்கிரஸ் ஆட்சி.

சிறையிலோ எனின் காட்டுமிராண்டித்தனமாக அரசியல் கைதிகள் நடத்தப்படுகின்றனர்.

இவைகளை எடுத்துக் கூறி, அரசியலாருக்கு நல்லெண்ணத்துடன் அறிவுறுத்தும் திராவிட முன்னேற்றக் கழகத்தாரை சர்க்கார் விரோதிகள் என்று கூறி, அடக்குமுறையைப் பிரயோகித்து வருகின்றனர்.

**சொந்தமுமில்லை, சொல்வதைக் கேட்பதுமில்லை!**

இன்றைய ஆட்சியால், தொழிலாளருக்கு நிம்மதியில்லை; ஆசிரியர்களுக்கு வாழ்க்கையில் வசதியில்லை; அறிவுப் பிரசாரத்தில், ஈடுபடும் மாணவர்களையும் பழி வாங்கப்படுகிறது; போதாக் குறைக்கு 'கம்யூனிஸ்டு' என்று பழி போட்டு மனித உரிமையைப் பறிக்கிறது, இந்தக் காங்கிரஸ் ஆட்சி.

வெள்ளை ஏகாதிபத்தியம் ஆட்சியிலிருந்தபோது வெட்கப்பட்டுப் பிரயோகித்த அடக்குமுறைப் பாணங்களை, பாரதமாதா புத்திரர்களாகிய அகிம்சா மூர்த்திகளின் ஆட்சியில் சிறிதுகூட மனிதாபிமானமின்றி, வெள்ளை ஏகாதிபத்தியத்தை மிஞ்சிவிடும் வகையில் அடக்குமுறைத் தர்பார் நடத்துகிறது.

அதுவும் அறிவுப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதும் பாய்கிறது. இன்றைய சர்க்காருக்குச் சொந்த புத்தியும் கிடையாது, சொல் புத்தியும் கேட்பதில்லை! அதனால் தான் இவ்வித அலங்கோலத்துடன் ஆட்சிமுறை சந்தி சிரிக்கிறது

**அறிவுள்ள செய்கையல்ல;**

திராவிட முன்னேற்ற கழகக் கொள்கைகள் என்ன? பதவிப் போட்டியா; தேர்தல் வேட்டையா? மந்திரிகளைக் கவிழ்த்துவிட்டு அந்தப் பீடத்தில் அமருவதா; நாட்டில் குழப்பம் விளைவிப்பதா? தண்டவாளத்தைப் பெயர்ப்பதா? தந்திக் கம்பியை அறுப்பதா? அல்லது குறைந்தது மந்திரிகளையாவது மிரட்டுவதா? லைசென்ஸ், பர்மிட், கள்ளமார்க்கெட் ஆகியவைகளுக்கு இடைத் தரகர்களாக இருப்பதா? ஜாதி வெறியை வளர்ப்பதா? நம் நாட்டை அந்நியர்களுக்குக் காட்டிக் கொடுப்பதா? அல்லது பதவி ஆசையினால் சொந்த நாட்டை மார்வாருக்கு அடிமையாக்கி அவர்களின் சுரண்டலுக்குக் கங்காணிகளாக இருப்பதா? இக்காரியங்களில் ஏதையாகிலும் நாங்கள் கொள்கையாகக் கொண்டிருந்தால், முன்னேற்றக் கழகத்தார் நாட்டுக்கு கேடு விளைவிப்பவர்களாக இருக்கலாம். ஆனால் இவையனைத்தையும் மறந்து, வரப்போகும் சட்டசபைத் தேர்தலில்கூட ஈடுபடுவது கிடையாது என்று மிகத் தெளிவாகத் தீர்மானித்துவிட்டு, மக்களிடம் ஆயிரமாயிரம் ஆண்டுகளாகக் குடிகொண்டுள்ள மடமையை, பழமையை, அடிமைத் தனத்தை ஒழித்து, மனிதத் தன்மையை வளர்ப்பதொன்றையே முக்கிய குறிக்கோளாகக்கொண் திராவிட முன்னேற்றக் கழகம், மீது அடக்குமுறையை வீசுவது அறிவுள்ள செய்கையாகுமா என்பதைப் பொது மக்களாகிய உங்களது தீர்ப்புக்கே விடுகிறேன்.

**சம்பளம் உயருகிறது!**

ஆயிரக்கணக்கான சம்பளம் போதாதென்று ''கிம்பளமும்'' வாங்கியதாக தங்கள் முகாமிலேயே குற்றஞ் சாட்டப்பட்டு ஊர் சிரிக்கும் மந்திரிகள் தேசபக்தர்களாம்! ஆனால் அப்பக்கமே திரும்பாமல, நாட்டில் உண்மையான அமைதியைக் காக்கும் வகையில் பணியாற்றும் நாங்கள் துரோகிகளாம்! என்ன மதியீனம் இது.

இவ்வளவுக்கும் பொதுமக்கள் உணர்ச்சி பெறாததுதான் காரணம்.

ஆச்சாரியார் ஆட்சியின் போது மந்திரிகளுக்கு 500 ரூபாய் சம்பளம்; இன்று 1500 ரூபாய்; அதேபோன்று சட்டசபை உறுப்பினர்களுக்கு முன்பு மாதம் 75 ரூபாய் இன்று 150 அதுமட்டுமா முன்பு சட்டசபை உறுப்பினர்களுக்கு சட்டசபை நடக்கும் ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு உறுப்பினர்க்கும் சாப்பாடு அலவன்சுக்கு 7-8-0 ஆகயிருந்தது. இன்று 12-8-0 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

மேலும் மந்திரிகளின் சுற்றுப்பிரயாணச் செலவோ சொல்லமுடியாது. இவ்வளவுக்கும் இந்த ஆட்சியால் மக்களுக்கு நன்மையாவது ஏற்பட்டதா? அதுவும் இல்லை!

**முக்கிய வரிகளெல்லாம் டில்லிக்கு!**

இப்படிச் சம்பளத்தை ஒன்றுக்குமூன்றுமடங்காக உயர்த்திக்கொண்டீர்களே இது நியாயமா என்று கேட்டால் விலைவாசி அதிகரித்துவிட்டது! கொஞ்சம் தாளமுடியவில்லை. எனவே, சம்பளத்தை உயர்த்திக் கொண்டோம் என்று மந்திரிகள் சார்பில் கூறப்படுகிறது.

ஆனால் ஏழைத்தொழிலாளி நடுத்தர மக்கள் தங்கள் சம்பளத்தில் சிறிது உயர்வு கேட்டால் மட்டும் தடியடி தர்பாரா? இது நேர்மையாகுமா? இதை அக்கிரம ஆட்சி என்று கூறுமல் வேறு என்னபெயர்கொடுத்து அழைப்பது!

விவசாயிகள் — நெசவுத் தொழிலாளர்கள் நிலை காண பதறுகிற சகிக்கவில்லை.

நம்நாட்டு மந்திரிகள் ஏழை எளியவர்களின் வரிப்பணத்தை ஊதாரித்தனமாகச் செலவு செய்வது போதாதென்று, வடநாட்டு ஏகாதிபத்திய டெல்லி சர்க்கார் நம் மாகாணத்தின் முக்கிய வருமானங்களாகிய, புகையிலை வரி, காபி, தேயிலை வரிகள், வருமானவரி ஆகிய நிரந்தரமான பெரிய வரிகளைக்கொண்டு போகின்றனர்.

நிலவரியும், விற்பனை வரியும் மட்டுமே நம் நாட்டின தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

ஆக ஏதோ 'கூட்டுக்கொள்ளை லிமிடெட்' போல அவரவர்கள் கையில்கிடைத்த அதிகாரங்களைக்கொண்டு மக்களின் வாழ்வு சிதறடிக்கப்படுகிறதேயல்லாது, இம்மாகாண முன்னேற்றத்துக்கும், மக்களின் நல்வாழ்வுக்கும் ஆன காரியங்களில் ஆட்சியாளர் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம் யார் ஆட்சிபீடத்திலிருப்பினும், அந்த ஆட்சி நூற்றுக்கு 95 பேர்களான பாட்டாளி—நடுத்தர மக்களின் நல்வாழ்வுக்கும், நம் மாகாண உரிமைக்கும் கேடு பயக்காமல், துரோகம் விளைவிக்காமல் இருக்க வேண்டுமென்ற கொள்கையைக் கொண்டதாகும்.

எனவேதான், ஆட்சிபீடத்துக்குப் போட்டியிடாமல், அவர்களது தவறைச் சுட்டிக்காட்டி, திருத்த முயற்சிக்கும் அறிவுப்பிரசார மன்றமாக திராவிட முன்னேற்றக் கழகம் திகழ்ந்து வருகின்றது.

மக்கள் சமுதாயத் துறையில் அரசியல் துறையில், பொருளாதாரத் துறையில் அறிவு வளர்ச்சிபெற வேண்டும் என்பதும், அவ்வித அறிவுடைமையை அஸ்திவாரமாக வைத்து நடத்தப்படும் ஆட்சியே நீடிக்குமென்றும், அதுதான் உண்மையானசுயராஜ்யமாக விளங்க முடியுமென்றும் திராவிட முன்னேற்றக்கழகம் கருதி அவற்றைக் கொள்கையாகக் கொண்டு பணியாற்றி வருகிறது.

ஆனால், சென்னை அரசியலார் மட்டும் அறிவைஅடக்க, அடக்குமுறையைக் கையாளும் விநோதப் பிறவிகளாகக் காட்சியளிக்கின்றனர்.

**நாம் என்றால் கூடுகின்றனர்**

அறிவு வளர்ச்சியிடம் போரிட்ட பெரிய பெரிய ஏகாதிபத்தியங்களெல்லாம் சரிந்து தவிடு பொடியாகி இருக்குமிடம் தெரியாமல் போயிருப்பதைக் கண்டும் 'லெதர்வேட்டு' காங்கிரஸ் ஆட்சிபீடங்காங்கிகளுக்கு தங்களது தவறான போக்கு இன்னும் தெரிந்தபாடில்லை!

அறிவியக்கத்தின் மீது எவ்வளவு அடக்குமுறைப்பாணங்கள்!

தோழர் அண்ணாத்துரை மீது வழக்கு, விருதைத் தோழர் ஆசைத்தம்பி தோழர் புலவர் செல்வராஜ் ஆகியோர் மீதும் வழக்கு. வழக்கில் ஒரு விசித்திரம், புத்தகத்தை அச்சிட்ட 500 ரூபாய் கூட மதிப்பிட முடியாத அச்சகத்துக்கு 3000 ரூபாய் ஜாமீன்!

கூட்டங்களுக்குத் 'திடீர்' தடை உத்தரவுகள்! இன்னும் சிறைவாசம், தடியடி, புத்தகங்கள்பறிமுதல்ஜாமீன்தொகை! இவ்வளவு தொல்லையிடையேயும் வளரும்நம்மைப்பார்க்கும் மந்திரிமார்கள் சட்டங்களும், அதிகாரமும் நம்மிடம் இருக்கின்றன. ஆனால் நம்மை நாட்டினர் மதிப்பதில்லையே, திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டம் என்றாலோ பலலாயிரக்கணக்கில் கூடுகின்றனரே என்று.

**வெளிப்படையாகக் கிளம்பப் போகிறது**

எனவேதான், ஆளவந்தார்களுக்குக் கூறுகிறேன் அறிவாயுதத்துடன் ஆணவமிக்க அடக்குமுறை போதுமானால், இறுதியில் அடக்கு முறை, அறிவுக்கு முன்பாகத் தலை வணங்கியே தீர வேண்டுமென்பதை.

'திராவிட நாடு திராவிடருக்கே' என்னும் எங்களது இதய கீதத்தின் தத்துவம் இன்னும் நான்கைந்து ஆண்டுகளுக்குள்ளாக காங்கிரஸ் முகாமிலிருந்தே வெளிப்படையாகக் கிளம்பப் போகிறது!

இன்றே மந்திரிசபையிலும், சில காங்கிரஸ் தோழர்களிடையேயும் அவ்வித எழுச்சி இப்பொழுது ஏற்பட்டு வருகிறது.

மற்றும், மணப்பாறையில் உள்ள மில் தொழிலாளர் குறைகள்பற்றி என்னிடம் அத்தோழர்களில் சிலர் கூறினர். மின்சார வசதிக் குறைவினால் வாரத்துக்கு இரண்டு நாள் மில்லை மூடி சம்பளத்தை முதலாளிகள் குறைப்பதாகக் கேள்வியுற்றேன். இது உண்மையாயின், சர்க்கார் உடனடியாகக் கவலை செலுத்தி, இரண்டு நாளில் ஒரு நாள் முதலாளியும் ஒருநாள் தொழிலாளரும் ஈடுசெய்ய வேண்டும். அதுதான் முறை. இந்த ஆட்சியில் தொழிலாளருக்கு இருக்கும் பலதொல்லைகளுக்கு மணப்பாறை மில் நிலையும் ஓர் உதாரணமாகும். மற்றும் இம் மில்லில் உள்ள குறைகளைத் தொழிலாளர்கள் அமைதியாக இருந்து கலகலவரங்களிலோ, வேலை நிறுத்தங்களிலோ ஈடுபடுகின்றது இறங்கிவிடாமல், நல்ல முறையில் ஆவன செய்யவேண்டும். தொழிலாளருக்குள் போட்டி சங்கமனப்பான்மை கூடாது.

இவ்வகையில் திராவிட முன்னேற்றக் கழகத்தாரும் இவ்வூர் மில் தொழிலாளர் உரிமை விஷயத்தில் அனுதாபம் காட்டுவர்என்றுஉறுதி கூறுகிறேன்.''

**நாடு பிரிந்தால்தான் நல்வாழ்வு**

திராவிட நாடு திராவிடருக்கே ஆனால்தான், ஆட்சிமுறையின் நல்ல அடிப்படையின் மீது நாட்டையும், தொழில் வளர்ச்சியையும், ஏற்படுத்த முடியும் என்பதை எடுத்துக்காட்டவிரும்புகிறேன் என்றும், மற்றும் தொழிலாளர் பிரச்சினையை மிக விரிவாகவும் எடுத்துரைத்ததோடு மலர்மாலைகள் அணிவித்த பல கழகத்தாருக்குத் தோழர் என். வி. நடராசன் நன்றி தெரிவித்தார்

தோழர் என். வி. நடராசன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவினைக் கூட்டத்தினர் மிக அமைதியாகவும் கைதட்டல்போன்ற உணர்ச்சியுடனும் கேட்டு வந்தனர்.

கூட்டம் கலைந்த பின்னர், மணப்பாறை திராவிட கழகத் தோழர்கள் என். வி. நடராசன், ஜி பராங்குசம் ஆகியோரைத் தங்கள் கழக அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று, சிறிது நேரம் அன்புபசரிப்பு மூலம் தங்களது நன்றியைத் தெரிவித்தனர்.

(ந. நி)

---

## மதுரை ஜில்லா போர்டு கூட்டம்

மதுரை, மார்ச். 19—

நேற்று மாலை மதுரை ஜில்லா போர்டு கட்டிடத்தில், ஜில்லா போர்டு கூட்டம் அதன் தலைவர் தோழர் என். ஆர். தியாகராசன் தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் வெள்ளளூர்ம் தாலுகா புதுப்பட்டி கிராமத்திலுள்ள போர்டு ஆரம்பபாடசாலையில் மேல் வகுப்புகள் நடத்துவதற்கு அனுமதியளித்தும், திருமங்கலம் சந்திரத்தின் வின் பகுதியில் தினசரி மார்க்கட் நடத்துவதற்கு அனுமதியளித்தும், மூதியோர் கல்வி சம்பந்தமான போர்டுகள், அதன் அதிகாரங்களை செலவு செய்யப்படுவதை சர்க்காரே ஏற்றுக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொண்டும், மற்றும் கிழக்கேயே குறிப்பிடுவன விஷயங்களையும் முடிவு செய்தது. (ந நி)

# கொழும்பு மேயர் குமரன்ரத்னம் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம்

—(0)—

## கம்யூனிஸ்டுகளை ஆதரித்ததுதவறும்!

கொழும்பு, மார்ச். 21—

கொழும்பு மேயர் டாக்டர் குமரன் ரத்னம் அவர்கள் மீது நேற்று நம்பிக்கை இல்லாத்தீர்மானம் கொண்டு வரப்பட்டதால், காரசாரமான விவாதம் நடந்தது. இடதுசாரிக் கட்சியினர் இத் தீர்மானத்தை ஒழுங்கு முறைக்கு மீறியதென்று கூறிக் கண்டித்தனர்.

நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்த உடனே மேயர் தம் இடத்தைக் காலிசெய்தார். உதவி மேயர் தோழர் அபுபக்கர் சபைக்கு தலைமைதாங்கினுர்.

சமீபத்தில் நடந்த நகராண்மைக் கழக மறு தேர்தலில் கம்யூனிஸ்டுக் கட்சியை ஆதரிக்குமுகமாக மேயர் குமரன்ரத்னம் வேண்டுகோள்விடப் பட்டிருப்பதாகக் குற்றம்சாட்டி, ஒரு தனிப்பட்ட அங்கத்தினர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தார்

நகராண்மைக் கழகத்தைச் சரிவர நடத்தவில்லையென்று மட்டுமே நம்பிக்கை இல்லாத்தீர்மானம் கொண்டு வரப்படவேண்டுமே தவிர, மற்றவைகளைக் குறிப்பிடுவது ஒழுங்குமுறை மீறியதென்று இடதுசாரியினர் வாதித்தனர். மேயர் எக்கட்சி பற்றுள்ளவர், அவர் வெளியில் என்ன சொல்கிருர் என்பதையெல்லாம் நிர்ணயிக்கச் சபைக்கு அதிகாரமில்லையென்று அவர்கள் வற்புறுத்தினுர்கள்.

மேயர் ஓதாவல் மக்களுக்குவிட்ட வேண்டுகோளின்போதுதான் இவ்வாறு செய்தாரென்று வலதுசாரியினர் வாதாடினர்.

60 நிமிடம் இரு தரப்பினடும் வாதாடியபின், பதனன்று இப்பிரச்னை பற்றிச் சட்டபூர்வமான ஆலோசனை கேட்டு அதன்பிறகு தம் எண்ணத்தை அறிவிப்பதாக உதவி மேயர் தெரிவித்தார்.

நகராண்மைக் கழக விதிகள்படி மூன்றில் இரண்டு பகுதியினர் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரித்தாலொழிய மேயர் ராஜினுமாச் செய்யவேண்டியதில்லை.

## பாக்கிஸ்தானில் தொழிலாளர் கட்சி தோற்றம்

லாகூர், மார்ச். 20—

அகில பாக்கிஸ்தான் முஸ்லிம் லீக் தொழிலாளர் சம்மேளனம், அகில பாக்கிஸ்தான் அவாமி முஸ்லிம் லீக் என்று புதியதொரு கட்சியைத் தோற்றுவிக்க ஒருமனதாக முடிவு செய்துள்ளது. இக்கட்சியின் திட்டங்கள் முஸ்லிம் லீகுக்கு எதிரிடையாக இருக்கும்.

தோழர் எச். எஸ். சுஹ்ராவர்த்தியைத் தலைவராகவும், அமைப்பாளராகவும் கொண்ட இக்கட்சி வரப்போகும் பொதுத் தேர்தலில் தனியாகப் போட்டியிடும்.

பாகிஸ்தானின் பல பகுதிகளிலிருந்து 1200 பிரதிநிதிகள் இப்புதிய கட்சி மாநாட்டில் கலந்து கொண்டார்கள். சர்வதேச நிலைமை சந்தேகிக்கக்கூடியவாறு இருப்பதால், பாக்கிஸ்தான் முஸ்லிம்களுக்குக் கட்டாய ராணுவப்பயிற்சி தரப்படவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இப்புதிய கட்சியை ஆதரித்துப் பல முக்கிய முஸ்லிம் பிரபலஸ்தர்கள் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியுள்ளனர்.

## போலந்து—ஸ்பானிஷ் வர்த்தக உறவு

லண்டன், மார்ச் 22.—

போலந்திலிருந்து நிலக்கரி ஏற்றி வந்த கப்பல் ஸ்பெயினுக்கு வந்து சேர்ந்ததாக, ஸ்பானிஷ் கடல் வர்த்தக பிரசுரம் அறிவிக்கிறது. இரும்பு திரைநாடு ஒன்றுடன் உறவு இருக்கிறது என்பதை ஸ்பெயின் முதன் முதலாக இப்பொழுதுதான் ஒப்புக் கொள்கிறது. —ருனோப்

## பெண்களை கொலை செய்தானும்

ஹாம்பர்க், மார்ச். 22—

ருடால்ப்பெலிக் என்கிற 25 வயதான ஜெர்மன் வாலிபன் பிரென்ஸ்விக் போலீசாரிடம் தான் 20 கொலைகளைச் செய்திருப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிருன். ஆனால் 12 கொலைகள் இவன் செய்ததாக நிரூபிக்கும் சாட்சியங்களே போலீசாரிடம் இருக்கின்றதாம். இவன் கொலை செய்தவர்கள் எல்லாம் பெண்கள் என்றும், சிற்றின்ப நோக்கத்துடனேயே இக்கொலைகள் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஜெர்மன்சட்டப்படி கொலை குற்றத்திற்குத் தூக்குத் தண்டனை கிடையாதாம்.

## தமிழ் அகராதி வெளியீடு

சென்னை, மார்ச். 22—

சென்னைசர்வகலாசாலையினரால் தயாரிக்கப்பட்டு வரும் தமிழ் அகராதி விரைவில் அச்சிடப்பட்டு வெளிவரும் என்று அறியப்படுகிறது.

## புழலேரி நீர் நிலை

சென்னை, மார்ச். 22—

சென்னை புழலேரியின் இன்றைய நீர் மட்டம் சென்ற ஆண்டு இதே தேதியிலிருந்த அளவைவிட 2-அடி அதிகரித்துள்ளது. இந்த அதிக அளவு 2 மாத காலத்திற்குப் போதுமானதாயால், இந்த ஆண்டுக் கோடையில் குடி தண்ணீர்ப் பஞ்சமிராதென்று கார்ப்பொரேஷன் கமிஷனர் தெரிவித்தார்.

## குறள் ஆராய்ச்சி மாநாடு

சென்னை, மார்ச். 20—

உலகப் பொது நூலான திருக்குறளில் ஆராய்ச்சி நடத்துவது பற்றி, ஆலோசிக்கும் பொருட்டு மார்ச், 26 ந் தேதியன்று சென்னை நகரில் ஒரு மாநாடு ஒன்று கூட்டுவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## இந்தியருக்குத் தனிப்பள்ளிக்கூடமில்லை

டர்பன், மார்ச். 22—

நேட்டால் இந்தியருக்கு 7-வது வகுப்புவரை கொண்டரி இலவசக் கல்வி அளிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

நேட்டால் மாகாணக் கௌன்ஸில் 1942-ல் செய்த முடிவு இப்பொழுது நிறைவேற்றப்படுகிறது. அடுத்த ஆண்டு 8-வது வகுப்புவரை இலவசக் கல்வி அளிக்கப்படும். 1955 ல் பத்தாவது வகுப்புவரை இலவசக் கல்வி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இன்னும் இந்தியர்களுக்காக தனிப்பள்ளிக்கூடம் இல்லை.

## இந்தியாவின் பெருமையை உணர்த்திவிட்டனர்

டர்பன், மார்ச். 22—

பண்டித குன்ஸ்ருவும், அவருடைய கோஷ்டியினரும் இந்தியாவின் பெருமையை உணர்த்தும் அளவுக்கு நன்முக நடந்துகொண்டிருக்கின்றனர் என்று 'இந்தியன் ஒபினியன்' பத்திரிகை பாராட்டி தலையங்கம் எழுதியிருக்கிறது. —ருனோப்

## வியாபாரம் செய்ய மறுப்பு

ஜோஹென்னஸ்பர்க், மார்ச். 22—

தென்னுப்பிரிக்க இந்தியர் ஒரு குறிப்பிட்ட இடங்களில்தான் புஷ்பம் விற்க வேண்டும் என்று ஒதுக்கிய இடத்தில் புது இடங்களில் விற்க முடியாது என்று மறுத்து விட்டனர். இவ்விஷயமாக கவுன்ஸில் நிர்வாகியை இந்தியர்கள் சந்திக்கவிருக்கின்றனர்.

## மாரியம்மாள் உற்சவத்துக்குத் தடை!

மதுரை, மார்ச். 20—

இந்நகர் திண்டுக்கல் ரோட்டில் இருந்து வரும் ராஜராஜேஸ்வரி தண்டுமாரியம்மன் கோவில் உற்சவத்தை யாரும் கொண்டாடக் கூடாதென்று, நேற்று மாலை மதுரைநகர் சப்-மாஜிஸ்திரேட் ஒரு மாத காலம் தடை விதித்து உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இக்கோவிலில் ஆண்டு ஆண்டு தோறும் நடைபெறும் இந்த விழாவில் இந்த ஆண்டு இரு கோஷ்டிகளுக்கிடையே தகராறு மூண்டு, அதன் நிமித்தம் அமைதிக்கு பங்கம் ஏற்படும் என்று கருதி மேற்படி தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோவிலில் எஸ். சுப்பிரமணியக் கவுண்டர் என்பவர் டிரஸ்டியாக இருந்து வருகிருர். இவர் மீது நம்பிக்கை இல்லை என்றும், எனவே அவர் இந்த உற்சவத்தை நடத்தினுல் தகராறு உண்டாகுமென்றும் அந்தக் கோவிலின் பக்தர்களில் ஒரு சாரார் கேட்டுக் கொண்டதின் பேரில் இத்தடை உத்திரவு போடப்பட்டுள்ளதாக போலீஸ் அறிக்கை கூறுகிறது. (ச. மி.)

## மாட்டுக் கொட்டத்துக்கு தீ வைத்ததாக வழக்கு

மதுரை, மார்ச். 18—

பிணத்தைப் புதைப்பதில் ஏற்பட்ட தகராறில் வரதாமன் என்பவருடைய மாட்டுக் கொட்டத்திற்கு தீ வைத்ததாக ராமன், மூக்கன் என்பவர்கள் மீது ஒரு வழக்கு தொடரப்பட்டு, அது இன்று ஜில்லா உதவி செஷன்ஸ் நீதிபதி வாதராஜுலு முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ராமனும், மூக்கனும் பெரியாம்பட்டி என்ற ஊரைச் சேர்ந்தவர்கள்.

வரதாமன் வல்லிசேராணியபுரம் என்ற ஊரைச் சேர்ந்தவர்.

ஊரணியில் பிணத்தைப் புதைப்பதில் ராமனுக்கும், வரதாமனுக்கும் தகராறு ஏற்பட்டது. இதன் காரணமாக வரதாமன் மாட்டுக் கொட்டத்தில் நள்ளிரவில் தீ வைத்ததாக விஸ்தார வழக்கில் சர்க்கார் தரப்பில் கூறப்பட்டது.

இந்தத் தீயினுல் ரு. 15,060 நஷ்டமேற்பட்டுள்ளதென்றும் புகார் செய்யப்பட்டுள்ளது.

வழக்கின் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ந—மி)

## மதுவிலக்கு சட்டத்தின் கீழ் ஒருவர் கைது

மதுரை, மார்ச். 20—

இந்நகர் நரிமேட்டைச் சேர்ந்த ரெங்கசாமி என்பவரை, போதை தரும் வஸ்துவை சாப்பிட்டிருந்ததாக சந்தேகித்துப் போலீசார் கைது செய்து ஜாமீனில் விடுதலை செய்திருக்கின்றனர்.

இவர் மீது மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ந—மி)

## சேமிப்பு வாரக் கொண்டாட்டம்

மதுரை, மார்ச். 19—

இராமநாதபுரம் ஜில்லா கலெக்டர் ஆபீஸ் ஊழியர்கள் கூட்டம் ஒன்று நேற்று கலெக்டர் உத்தண்டராமபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் சர்க்கில் உதவி தேசிய சேமிப்பு அதிகாரி சிறு சேமிப்பு என்பது பற்றி விளக்கினுர். அதன் பேரில் அனைவரும் சிறு சேமிப்பு ஏற்கன ஏற்படுத்திக் கொண்டனர். இதுபோன்று மதுரை கலெக்டர் ஆபீஸில் உள்ளவர்களும் சிறு குரூப்புகள் ஏற்படுத்திக் கொண்டனர்.

இது சம்பந்தமான சுவரொட்டிகளைக் கொண்ட வண்டிகள் நகரில் பல இடங்களுக்கும் சென்று விளம்பரம் செய்தன. (ந மி)

# கணியூர் மாநாட்டின் வரவு—செலவு கணக்கு விவரம்

## வரவேற்புக் குழு கூடி ஆராய்ந்தது

1950-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 19-ந் தேதி பகல் 2 மணிக்குக் கணியூர் விக்டரி மில்லில் பெத்தாம் பாளையம் பி பழனிச்சாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கோவை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டின் வரவேற்புக் குழுக் கூட்ட நடவடிக்கைகள்.

(1) 29—1—50ல் நடைபெற்ற மாநாட்டின் வரவு செலவுக் கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது.

(2) செலவுபோக மீதி இருப்பு இருக்கும் ரு. 2337—3—9 ஐ வரவேற்புக் கமிட்டித் தலைவர் பெத்தாம்பாளையம் பி. பழனிச்சாமி அவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

(3) மின்சார இலாகாவில் கட்டியிருக்கும் (டிபாசிட்) தொகை திருப்பிக் கொடுக்கப்பட்டவுடன் மாவட்டக் கமிட்டியில் ஒப்புவித்துவிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

(4) தற்பொழுது இருக்கும் இருப்பிலிருந்து வரவேற்புக கமிட்டித் தலைவர். தமது உசிதம்போல் 'மாலை மணிக்கு' விளம்பரக் கட்டணம் பில் பார்த்துக் கொடுத்து கணக்கு வைத்துக்கொள்ள இக் கமிட்டி அதிகாரமளித்திருக்கிறது

(5) மீதி இருப்புத் தொகை. என்ன காரியத்திற்கு உபயோகிப்பதென்று மாவட்டக் கமிட்டியைக் கூட்டி, அதன் முடிவுப்படிசெய்வதென்று இக்கமிட்டி தீர்மானிக்கிறது.

இத்துடன் வரவேற்புக் கமிட்டி கலைக்கப்பட்டது.

### வரவு இனங்கள்

| | ரூ. அ. பை |
|---|---|
| நன்கொடை | 1756—0—0 |
| மாநாட்டுக் கட்டணங்கள் விற்பனை | 8285—0—9 |
| ஸ்டால் வகை | 148—0—0 |
| மீதி சமையல் சாமான்கள் விற்பனை | 222—6—6 |
| பந்தல் சாமான்கள் விற்பனை | 849—2—0 |
| மொத்தம் | 11,260—9—3 |

### செலவினங்கள்

| | ரூ. அ. பை |
|---|---|
| உணவு வகையரு | 3918—7—6 |
| பந்தல் வகை | 2115—4—6 |
| போக்குவரத்து, விளம்பரம், தந்தி, தபால் | 817—10—0 |
| சொற்பொழிவாளர் வகை | 409—0—0 |
| மின்சாரம், ஒலிபெருக்கி வகை | 620—10—3 |
| நாடகம் | 789—8—0 |
| இதர வகைகள் | 252—13—3 |
| இருப்பு | 2337—3—9 |
| மொத்தம் | 11260—9—3 |

இங்ஙனம்
வரவேற்புக் குழுவினர்

## இனி நடப்பவை

சென்னை:— மறுமலர்ச்சி சொற்பயிற்சி மன்றம் சைதாப்பேட்டை சொற்பயிற்சிக் கூட்டம் 24—3—50 அன்று மாலை 6 மணிக்கு சைடாப்பேட்டை முதலித் தெருவிலுள்ள 2 வது எண்ணுள்ள இல்லத்தின் மேல்மாடியில் நடைபெறும்.

* * *

திருவனந்தபுரம்:- இம்மாவட்டத்தில் தி. மு. க. கிளைகளைப் பெருக்கி அமைத்து சீரமைக்க வேண்டியிருப்பதாலும், தோழர் என். வி. நடராசன் அவர்கள் வருகை குறித்து ஆலோசிக்கவேண்டியிருப்பதாலும், கழகத்தில் 25-3-50 சனி இரவு செயற்குழுக் கூட்டம்நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

* * *

ஆரணி:—இவ்வூர் தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் தோழர் கி. ஜயராமன் அலுவலகத்தில்25-3-50 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். அதுசமயம் சில முக்கியமான விஷயங்கள் தீர்மானிக்க வேண்டியிருப்பதால், கழக உறுப்பினர்கள் இதையே அழைப்பாகக் கொண்டு வர வேணுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

* * *

ஆற்காடு:—இவ்வூர் கஸ்தூரி பஜாரில் இருக்கும் முனிக்கண்ணு தையல் அலுவலகத்தில், 26 3 50 அன்று மாலை 4 மணிக்கு, தி. மு. கழகச் சார்பாக, 'நகர் மன்றம்' ஒன்று திறக்கப்படும், கழக அன்பர்கள், கழகத் தோழர்கள் அனைவரும் அழைக்கப்படுகிருர்கள்.

## ஐரோப்பியர் வெளியேற தடை

ஹாங்காங் மார்ச். 22—

ஷாங்காயிலிருந்து சட்டவிரோத வெளியேறவிருந்த ஐரோப்பியர்களை வெளியேறக்கூடாதென்று சீன கம்யூனிஸ்டுகள் தடுத்துவிட்டனர். அமெரிக்க கப்பல் ஜெனரல் கார்டனில் இவர்கள்செல்ல இருந்தனர். கப்பலில் ஏறியவர்களும் கரைக்குத் திரும்பிவந்து தங்க இடமில்லாமல் தவிக்கிறனர்.

காரணமான பேர்கள்வெளியேறுவதன்மூலம் ஷாங்காய் நகரின் பொருளாதார நெருக்கடி நிலைமை ஏதோ வெளிப்படுகிறதோ என்பதால் இத்தடை உத்தரவைப்பிறப்பித்திருப்பதாகத் தெரிகிறது.

## டில்லியிலிருந்து தமிழில் தந்தி!

ஏப்ரல் முதல் தேதியிலிருந்து தமிழிலும், தெலுங்கிலும் தந்திகள் சென்னையின் பல பகுதிகளுக்கு அனுப்பப்படுவதற்காக டில்லியில் ஏற்றுக்கொள்ளப்படும். இந்தத் தந்திகள் டிரக்டெலிபோன் மூலம் அனுப்பப்படும்,

அதேபோன்று வங்காள மொழியில் தந்திகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு டில்லியிலிருந்து கல்கத்தாவுக்கு 'டிரங்க் டெலிபோன்' மூலம் அனுப்பப்படும். இதற்கு கொடுக்கப்படவேண்டிய கட்டணம் 'எக்ஸ்பிரஸ் தந்தி' கட்டணமாகும்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1